**பாதெனியா- அநுராதபுரம் வீதி முன்னேற்றச் செயற்திட்டம் - 2013**

---

பாதெனியா- அநுராதபுரம் வீதி முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாதெனியா முதல் அநுராதபுரம் வரையான 80.8 கிலோமீற்றர் வீதியின் முன்னேற்றத்திற்காக 2008 திசெம்பர் 19 இல் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்திற்கான அரசாங்க முகவரான கொரிய ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் (எக்சிம் வங்கி) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) இடையில் கைசாத்திடப்பட்ட பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் (ஈடிசீஎவ்) எஸ்ஆர்ஜ- 18 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

கடன் உடன்படிக்கையின்படி, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு (எம்எச்பிஎஸ்) மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ) என்பன முறையே செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. செயற்திட்டத்தின் நோக்கங்களாவன (அ) இலங்கையின் வடமத்திய பிராந்தியத்தில் பிரதான போக்குவரத்து பகுதியில் அமைந்துள்ள பாதெனியா – அநுராதபுரம் வீதிக்கு இடையிலான வீதிப் பிரிவை முன்னேற்றுவதன் ஊடாக சமூகச் செலவினைக் குறைப்பதனாலும் கைத்தொழில் போட்டியினை உயரத்த்துவதனாலும் பிராந்தியத்தின் பொருட்கள் மற்றும் மக்களின் பரிமாற்றத்தையும் அதேபோல் தேசிய பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமப்படுத்தப்பட்ட பிராந்திய அபிவிருத்தி என்பவற்றை உயர்த்துவதையும் செயற்படுத்துவது மற்றும் (ஆ) கட்டுநாயக்கா – பாதெனிய பிரிவு வீதியை இணைப்பதற்கு திட்டமிடுதலுடன் கட்டுநாயகாவில் அமைந்துள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் மற்றும கலாச்சார மரபுரிமையும் சுற்றுலா பயணிகளை கவருவதும் அமைந்துள்ள இலங்கையின் வடமத்திய பிராந்தியத்திற்கும் இடையில் பிரயாணிகளது போக்குவரத்திற்கு வசதியளிப்பதன் மூலம் இலங்கையினுடைய சுற்றுலாக் கைத்தொழிலின் சர்வதேச போட்டித் தன்மையை வலுப்படுத்துவற்கும் எதிர்பார்க்கின்றது. கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்ட்ட கிரயம் ரூபா 9,670 மில்லியனானதுடன் அதில் ஐ.அ.டொலர் 55 மில்லியனிற்கு சமமான ரூபா 7,554.03 மில்லியன் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. 2012 நவம்பர் மாதத்தில் ரூபா 1,232.90 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 11.32 மில்லியன் குறை நிரப்பு கடனால் ஆரம்ப கடன் தொகை அதிகரிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2009 யூலை 01 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2012 சனவரி 01 அளவில் 30 மாதங்களிற்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2012 நவம்பர் 30 இலேயே பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்**

---

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்பித்த நிதிக் கூற்றுக்களின்

மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கொல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க மதிப்பீடுகள், அவற்றின் ஒட்டுமொத்த வெளிப்படுத்தல்களின் மதிப்பீடு, என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நொக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள், மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டினையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் கண்ணோட்டத்தில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியவையாக இருந்ததா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் செய்யப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்து ரைக்கப்பட்ட அளவீடுகளுடன் இணங்கியதாக இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(உ) செயற்திட்ட அமுலாக்கலிற்காகப் பின்பற்றப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவுகள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதும்

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 2,188,658,160 ஆகவும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 10,579,689,658 ஆகவும் இருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| செலவின விடயங்கள் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான சொத்துக்கள் | - | 8,200 | 92,286 |
| சிவில் வேலைகள் | 335,278,224 | 4,783,790,852 | 9,557,525,894 |
| ஆலோசனை சேவைகள் | 103,290,530 | 263,565,997 | 751,641,073 |
| காணிச் சுவீகரிப்புகள் | 48,140,662 | 20,738,261 | 136,202,250 |
| நிர்வாகக் கிரயம் | 11,599,286 | 27,943,267 | 120,767,821 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினம் | - | - | 1,470,365 |
| | 2,188,658,160 | 3,011,540,536 | 10,579,689,658 |

## 5 கணக்காய்வு அவதானிப்புகள்

மூன்று வேறு செயற்திட்டங்களிற்கு ஒதுக்கப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு செயற்திட்டத்தால் செலவழித்த ரூபா 11,927,969 தொகை இச்செயற்திட்டத்தால் ஏற்பட்ட கிரயமாக கருதப்பட்டிருந்தது.

## 6. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிப் பயன்பாடு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, செயற்திட்டத்தின் நிதியளிப்பு மற்றும் பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறிப்பிடத்தக்க சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013 ஆம் ஆண்டிற்கான நிதிகளின் பயன்பாடு | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள் |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) |
| ஈடிசீஎவ் | 66.32 | 8,786.93 | 1,517.47 | 1,517.47 | 9,292.15 |
| இலங்கை அரசாங்கம் | - | 2,115.97 | 659.33 | 671.18 | 1,286.85 |
| மொத்தம் | 66.32 | 10,902.90 | 2,176.80 | 2,188.65 | 10,579.00 |

### 6.2. ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகளில், செயற்திட்டமானது குறைநிரப்பு கடன் உடன்படிக்கையில் செய்யப்பட்ட ஏற்பாடுகள் காரணமாக ஒப்பந்தகாரரால் ஏற்பட்ட வெளிநாட்டு நாணய பரிமாற்ற நட்டத்தை இழப்பீடு செய்வதற்கு ரூபா 431,403,850 தொகை செலவழித்திருந்தது. மேலும், கோரிக்கைகள் தீர்ப்பனவு செய்வதிலுள்ள தாமதம் காரணமாக ஒப்பந்தகாரருக்கு செயற்திட்டத்தால் ரூபா 13,475,520 தொகையான நிதிக் கட்டணங்களும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வீதி நிர்மாண வேலைகளின் மூல அளவீட்டு பட்டியலிற்கு ரூபா 329,129,118 பெறுமதியான முரண்கள் செய்யப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. மேலும், ஆரம்ப கட்டத்தில் முறையான வீதி அளவைகள் செய்யப்பட்டிருந்தால் அத்தகைய முரண்களில் சில குறைக்கப்பட்டிருந்தது. மேலும், ஆரம்ப ஒப்பந்த உடன்படிக்கையின் விலைத் தளப்பல்களிற்காக செய்யப்பட்ட ரூபா 152,306,769 தொகையான ஒதுக்கீடுகள் ரூபா 270,442,407 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவு விலைத்தளம்பல்கள் அளவீட்டுப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**7. காணிச் சுவீகர்ப்பு நடவடிக்கைகள்**

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 நவம்பர் 30 இல் வீதி முன்னேற்ற வேலைகளை பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் திருத்தப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம், செயற்திட்டமானது காணிச் சுவீகரிப்பு நோக்கத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 48,140,662 தொகை செலவழித்திருந்தது. இது தொடர்பில் ஏற்பட்ட திரண்ட செலவினம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 136,202,250 ஆகும்.

(ஆ) செயற்திட்ட பணிப்பாளரால் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்களின் பிரகாரம், குடியிருப்பு காணிகள் உள்ளடங்கலாக 8 மாவட்டங்களில் 1,744 காணித் துண்டுகள் சுவீகரிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 426 காணித் துண்டுகளிற்காக மாத்திரம் இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது. அதில் 25 காணித் துண்டுகள் மாத்திரம் காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம் காணிப் பதிவில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(இ) காணி உடமையாளர்களிற்கான இழப்பீடு செலுத்துவதிலுள்ள தாமதம் காரணமாக செயற்திட்டத்தால் ரூபா 1,457,689 தொகையான வட்டி செலுத்த வேண்டியிருந்தது.

(ஈ) நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் 01/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் கீழ் காணிச் சுவீகரிப்பு நடவடிகைகளில் ஈடுபட்டிருந்த பிரதேச செயலகங்களின் பதவியணியினருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 205,550 கூட்டு மொத்தத் தொகையான ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 07 உத்தியோகத்தர்களும் ஒவ்வொரு காணிச் சுவீகரிப்பு நோக்கத்திற்கும் ரூபா 12,500 படிகளுடன் நியமிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் அவர்களிற்கு ரூபா 737,500 கூட்டு மொத்தத் தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தது. பிரதேச செயலகங்களால் இணைக்கப்பட்ட உத்தியோகத்ர்களிற்கு மேலதிகமாக காணிச் சுவீகரிப்பு நோக்கங்களிற்காக செயற்திட்டத்தால் மேலதிக பதவியணியினரை நியமிப்பதற்கான காரணங்கள் கணக்காய்விற்காக விளக்கப்பட்டிருக்கவில்லை.